நிபந்தனைகள்

1. மேற்காண் பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு தொடர்ந்து பணியாற்றி அன்னாரது தகுதிகாண் பருவ காலத்தினை மன நிறைவு அளிக்கும் வகையில் பூர்த்தி செய்ய வேண்டும்.

2. மேற்காண் பணியாளர் அன்னாரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்து அதற்குறிய அனைத்து தேர்வுகளிலும் தேர்ச்சி பெற வேண்டும்.
3. மேற்காண் பணியாளர் அன்னாரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் அரசு பணியாளர்களுக்கு நடத்தப்படும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்ச்சி பெற வேண்டும்.

மேற்கண்ட விபரத்தினை சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டில் உரிய முறையில் பதிவுகள் மேற்கொள்ள சம்மந்தப்பட்ட அலுவலருக்கு அறிவிக்கப்படுகின்றது. மேலும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலினை உடன் அனுப்பிடவும் அறிவிக்கலாகிறது.

பணிப்பதிவேடு 1 தொகுதி

24/6/2020

முதன்மைக் கல்வி அலுவலர்
திருப்பூர்
24/6/2020

பெறுநர்
சம்மந்தப்பட்ட பணியாளர் (வட்டாரக் கல்வி அலுவலர், பல்லடம் மூலம்)
நகல்: வட்டாரக் கல்வி அலுவலர், பல்லடம்
மாவட்டக் கல்வி அலுவலர் பல்லடம்

ந.க.எண்.538/அ1/2020, நாள்: 16.07.2020.

நகல் அனுப்பப்படுகிறது

16.07.2020
வட்டாரக் கல்வி அலுவலர் - I
பல்லடம் - 641664.

18/7/2020

பெறுநர்
சம்பந்தப்பட்டவர்

# திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர் திரு ரா.ரமேஷ்.,எம்.எஸ்.சி.,எம்.எட்.,எம்.பில்
**மூ.மு. எண் 3349/அ1/2020 நாள் 06.2020**

பொருள்: தமிழ்நாடு பள்ளிக் கல்வி – அமைச்சுப்பணி – திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகம் – இளநிலை உதவியாளர் திரு க.சக்திவேல் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்து ஆணை வழங்குதல் சார்பு

பார்வை:
1. தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளார் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களது செயல்முறைகள் ந.க.எண் 195/அ4/இ1/2019 நாள் 23.02.2019
3. அரசுக் கடித எண் 21472/ப.க.4(2)/2014 நாள் 03.07.2014
4. திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலரது செயல்முறைகள் ந.க.எண் 1881/அ1/2019 நாள் 27.02.2019
5. அரசு ஆணை எண் 101 பள்ளிக் கல்வி(வரவு–செலவு)த்துறை நாள் 18.05.2018
6. பல்லடம் மாவட்டக் கல்வி அலுவலரது கடிதம் மற்றும் கருத்துரு ந.க.எண் 1560/அ1/2020 நாள் 22.06.2020

***************************

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு தொகுதி IV தேர்வு மூலம் தேர்வு செய்யப்பட்டு பார்வை 2– இல் காண் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களது ஆணைப்படி திருப்பூர் மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 4–இல் காண் திருப்பூர் முதன்மைக் கல்வி அலுவலரது ஆணையின்படி இளநிலை உதவியாளராக நியமனம் வழங்கப்பட்டு 28.02.2019 முற்பகல் பணியில் சேர்ந்து தற்போது பல்லடம் வட்டாரக் கல்வி அலுவலர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியாற்றி வரும் திரு க.சக்திவேல் என்பாருக்கு பணிவரன்முறை செய்திகோரி பார்வை 6–இல் காண் கடிதத்தின்படி கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை 6–இல் காண் கருத்துரு அடிப்படையிலும், பல்லடம் மாவட்டக் கல்வி அலுவலர் அவர்களது பரிந்துரை அடிப்படையிலும் பல்லடம் வட்டாரக் கல்வி அலுவலர் அவர்களால் தனியர் சார்ந்து ஒழுங்கு நடவடிக்கை, புகார், வழக்குகள் மற்றும் தணிக்கைகத் தடை ஏதுமில்லை என சான்றளிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் பார்வை 5–இல் காண் அரசு ஆணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரப் பகிர்வின் அடிப்படையிலும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளார் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 ஆகியவற்றின் குறிப்பிட்டுள்ள விதிகளின்படி திரு க.சக்திவேல் என்பார் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த 28.02.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகின்றது.